டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 28.07.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 034 - Madurai | Online Edition

# கடல்சார் துறையில் திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள்

புது தில்லி, ஜூலை 27

மத்திய அரசின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மத்திய திறன் மேம்பாடு, தொழில்முனைவோர் அமைச்சகம், நாடு முழுவதும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் திறன் பயிற்சி, மறுதிறன் பயிற்சி, மேம்பட்ட திறன் பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பிரதமரின் திறன் மேம்பாட்டுத் திட்டம், மக்கள் கல்வி நிறுவனம், தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்புத் திட்டம், தொழிற்பயிற்சி கல்வி நிறுவனங்கள் வாயிலாக செயல்படுத்தப்படும் கைவினைஞர் பயிற்சித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் விரிவான கட்டமைப்புகள் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கடல்சார் துறை உள்ளிட்ட பல்வேறு தொழில்துறை சார்ந்த திறன்களுடன், இந்திய இளைஞர்களை எதிர்காலத்திற்குத் தயார்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கடலோரப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் உட்பட இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அவற்றில் (i) பிரதமரின் திறன் மேம்பாட்டுத் திட்டம், பிற திறன் மேம்பாட்டு முயற்சிகள் மூலம், தொழில்துறைக்கு ஏற்ற திறன்களை வழங்குதல் (ii) சரக்குப் போக்குவரத்து, துறைமுக செயல்பாடுகள், கிடங்கு மேலாண்மை, விநியோக நடைமுறைகளுக்கான மேலாண்மை, கடல்சார் பணிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பயிற்சி அளித்தல் (iii) தொழில் துறையினருடன் கலந்தாலோசித்து உருவாக்கப்பட்ட தேசிய திறன் தகுதி கட்டமைப்பின் அடிப்படையிலான தகுதித் தொகுப்புகளுடன் பாடத்திட்டங்களை ஒருங்கிணைத்தல் (iv) ஏற்கனவே

திறன் படைத்த தொழிலாளர்களுக்கு, முந்தைய கற்றல் நடைமுறைகளை அங்கீகரித்தல் முறையை ஊக்குவித்தல் (v) தொழில்துறை ஒத்துழைப்பு, வேலைவாய்ப்பு வசதி மூலம் பயிற்சி பெற்றவர்களை வேலைவாய்ப்புகளுடன் இணைப்பதை ஊக்குவித்தல் போன்றவை அடங்கும். இம்முயற்சிகள் கடலோரப் பகுதி இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதையும், கடல்சார், சரக்குப் போக்குவரத்து, அது சார்ந்த துறைகளில் மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

மக்களவையில், மத்திய திறன் மேம்பாடு, தொழில் முனைவோர் துறை இணையமைச்சர் ஜெயந்த் சவுத்ரி எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

## வறட்சி மேலாண்மை செயல்விளக்கம் & விவசாயிகள் சந்திப்பு முகாம்



சேலம், ஜூலை 27

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில், தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை மற்றும் அட்மா (ATMA) திட்டத்தின் சார்பில் வறட்சி மேலாண்மை குறித்த செயல்விளக்கம் மற்றும் விவசாயிகள் சந்திப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

### நானோ யூரியா மற்றும் PPFM தெளிப்பு செயல்விளக்கம்

வேப்பநத்தம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ரமேஷ் என்பவரது தோட்டத்தில், மக்காச்சோளம் பயிரில் நானோ யூரியா தெளிக்கும் செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. நிகழ்ச்சியில் பங்கேற்ற வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் பேசுகையில், ‘குருணை வடிவிலான யூரியாவைப் பயன்படுத்தும்போது மண்ணின் தரம் பாதிக்கப்படுவதோடு, சாகுபடிச் செலவும் அதிகரிக்கிறது. ஆனால், ஒரு ஏக்கருக்கு 500 மி.லி நானோ யூரியாவை (10 லிட்டர் நீருக்கு 50 மி.லி வீதம்) காலை அல்லது மாலை வேளையில் தெளிப்பான் மூலம் தெளித்தால் மண் மாசுபாடு தவிர்க்கப்பட்டு, செலவும் குறையும்; கூடுதல் லாபமும் கிடைக்கும். இதை பிற மருந்துகளுடன் கலந்து தெளிக்கக் கூடாது‘ எனக் குறிப்பிட்டார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தொடர்ந்து, விவசாயி ராஜசேகர் என்பவரது பருத்தி வயலில் பி.பி.எஃப்.எம் (PPFM) பாக்டீரியா தெளிப்பு செயல்விளக்கம் நடைபெற்றது.

இதுகுறித்து வேளாண்மை துணை இயக்குனர் (மாநிலத் திட்டம்) கண்ணன் தெரிவிக்கையில், 'தற்போது எல்-நினோ பாதிப்பால் நிலவும் வறட்சியைச் சமாளிக்க, 10 லிட்டர் நீருக்கு 100 மி.லி பி.பி.எஃப்.எம் கலந்து தெளிப்பதால் பயிர்களிலிருந்து நீர் ஆவியாவது குறையும். இதனால் பயிர்கள் 10 முதல் 15 நாட்கள் வரை வறட்சியைத் தாங்கி வளரும்; மகசூல் இழப்பும் தவிர்க்கப்படும். இந்த பாக்டீரியா தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கிடைக்கிறது' என்றார்.

இதனைத் தொடர்ந்து, தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் அட்மா திட்டத்தின் சார்பில் கிசான் கோஸ்திஷ் விவசாயிகள் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மைத் துறை அதிகாரிகளுடன் இணைந்து ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய வேளாண் விஞ்ஞானி வேல்முருகன், வேளாண் அலுவலர் ஜானகி, துணை வேளாண் அலுவலர் மணவழகன், வேளாண் அலுவலர் சுரேந்தர், தோட்டக்கலை அலுவலர் பிரபாவதி, கால்நடை மருத்துவர்கள் லோகநாயகி, சக்திவேல் மற்றும் விதை சான்று அலுவலர் மணிமொழி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் மூலம் பயிர் காப்பீடு, வறட்சி மேலாண்மை நுட்பங்கள், சொட்டுநீர் பாசனம், தரமான விதைச்சான்று விவரங்கள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. மேலும் விவசாயம் சம்பந்தமாக கருத்துக்காட்சி அமைக்கப்பட்டது

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரமேஷ், முத்துவேல் மற்றும் வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் கார்த்திக், தமிழ்ச்செல்வன், சந்தோஷ், ரவிக்குமார், பெரியசாமி, கணேஷ் மூர்த்தி, வித்யா ஆகியோர் செய்திருந்தனர். 100 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தயார்நிலை உணவுகள் தயாரித்தல் பயிற்சி

கோயம்புத்தூர், ஜூலை 27

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தயார்நிலை உணவுகள் தயாரித்தல் பயிற்சி 29 மற்றும் 30.07.26 ஆகிய இரண்டுநாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி), அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்தில் நடைபெறும்.

கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- தோசைமிக்ஸ்
- அடை மிக்ஸ்
- டேக்ளா மிக்ஸ்
- பிசிபெலா பாத்மிக்ஸ்
- கீர் மிக்ஸ்
- குளோப் ஜாமூன் மிக்ஸ்
- ஐஸ்கீரிம் மிக்ஸ்
- தக்காளி சாதம் மிக்ஸ்
- சூப் மிக்ஸ்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1,500 + GST 18%)- பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, 0422 6611340, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தை முன்னிட்டு கண்காட்சி அரங்கம்

நாகப்பட்டினம், ஜுலை 27

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரகத்தில் 24.7.26 அன்று வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றதை முன்னிட்டு விதைப்பரிசோதனை நிலையத்தின் சார்பாக கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டது.




கண்காட்சி அரங்கத்தினை மாவட்ட ஆட்சியர், அனைத்து வட்டார முன்னோடி விவசாயிகள் மற்றும் பொது மக்கள் பார்வையிட்ட போது விதைப்பரிசோதனை நிலையத்தின் முக்கிய பணிகள் மற்றும் தரமான விதைகள் கிடைக்க விதைப் பரிசோதனை அவசியம் குறித்தும், விதைப் பரிசோதனை அலுவலர்களால் பரிசோதிக்கப்பட்ட தரமான விதைகளை தேர்ந்து எடுத்து விதைப்பு மேற்கொண்டு, அதிக மகசூல் பெற வேண்டும் என விதைப்பரிசோதனை நிலைய அலுவலர்கள் அ.அமுதாதேவி மற்றும் செ.பிரசன்னா விளக்கி கூறினார்கள்.

விதைப்பரிசோதனை நிலைய அலுவலர்களால் மடிப்புதாள் முறை மற்றும் தாள் மேல் விதைப்பு முறை பயன்படுத்தி நெல், உளுந்து, பச்சைபயறு மற்றும் எள் ஆகிய விதைகளை முளைப்பு செய்யப்பட்ட மாதிரிகள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ஏற்ற நெல் இரகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இக்கண்காட்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை துணை இயக்குநர் (மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்), வேளாண்மை துணை இயக்குநர் (திட்டம்), விதை ஆய்வு துணை இயக்குநர், துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), விதை சான்று உதவி இயக்குநர், அனைத்து வட்டார உதவி இயக்குநர்கள், விதை சான்று அலுவலர்கள் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பண்ணை இயந்திரங்கள் பராமரிப்பு பயிற்சி மற்றும் இயந்திரம் வழங்கும் விழா

கடலூர், ஜூலை 27

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துறையின் கீழ் உள்ள இயந்திரவியல் துறை சார்பாக வேளாண்மை அறிவியல் நிலையத்தின் துணையுடன் பண்ணை இயந்திரங்கள் பராமரிப்பு பயிற்சி மற்றும் இயந்திரம் வழங்கும் விழா நடைபெற்றது.



இதில் கடலூர் மாவட்ட பல்வேறு வட்டாரத்தை சேர்ந்த பட்டியலினத்தவர்களுக்கு இயந்திரங்கள் வழங்கி அதனை உபயோகப்படுத்தும் முறையும் பராமரிக்கும் முறையையும் செயல்விளக்கமாக பயிற்சி நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கா.சுப்ரமணியன், தலைமை தாங்கி அறிஞர் அண்ணா கூறிய சமுத்துவத்தை விவசாயத்தில் நடைமுறை படுத்துவதற்காகவும் செலவினை குறைத்து வருமானத்தை பெருக்கவும் ஏழ்மை இல்லா இந்தியாவை உருவாக்க இம்மாதிரி உதவிகளை வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும் தமிழ்நாடு வேளாண்மை கழகமும் இணைந்து செய்வதாக கூறினார்.

முதன்மையர் வேளாண்மை பொறியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் முனைவர் பா.ராஜ்குமார், கலந்துக் கொண்டு 126 பண்ணை கருவிகள் உள்ளதாக கூறி அதனை நன்கு பயன்படுத்தி பராமரிக்கும்மாறு வலியுறுத்தினார்.


பேராசிரியர் மற்றும் தலைவர் இயந்திவியல் துறை மற்றும் சக்தி பொறியியல் துறை, கோயம்புத்தூர் முனைவர் இரா.கவிதா வரவேற்புரை வழங்கினார்.

வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் முனைவர் ரெ.பாஸ்கரன், இவ்விழாவின் முக்கியத்துவத்தையும் மேலும் கடலையில் அறுவடை சார் இயந்திரங்களில் ஆராய்ச்சி தேவை என்பதை வலியுறுத்தி வாழ்த்துரை வழங்கினர்.

கடலூர் மாவட்டத்தில் தேர்ந்து எடுக்கப்பட்ட பட்டியலினத்தவர்களுக்கு பண்ணை கருவிகள் வழங்கப்பட்டு நிறைவாக முனைவர் இர.தியாகராஜன் நன்றியுரை வழங்கினார்.



# விதைப்பரிசோதனையின் அவசியம் - ஒரு பார்வை



விவசாயிகள் அதிக மகசூல் பெற்றிட, விதைப்பதற்கு முன் விதை பரிசோதனை செய்து விதையின் தரத்தை தெரிந்து கொள்ள வேண்டுமென திருச்சி மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ் தெரிவித்துள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நெல், சோளம், கம்பு, மக்காசோளம், பயறு வகைபயிர்கள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்து பயிர்களான எள், நிலக்கடலை அதிகமான பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தரமான விதைகள் மூலமே சரியான பயிர் எண்ணிக்கையை பராமரித்து அதிக மகசூல் எடுக்க முடியும். இதனால் குறைந்த தரம் உடைய விதைகளை நடவு செய்வதன் மூலம் ஏற்படும் இடர்பாடுகளை குறைக்கலாம்.

தமிழ்நாடு அரசு விதைச்சான்று மற்றும் உயிர்ம சான்று துறையின் கீழ் செயல்பட்டு வரும் திருச்சி விதைபரிசோதனை நிலையத்தில், விதைகளின் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத் திறன், பிறரகக் கலப்பு ஆகிய நான்கு பரிசோதனைகள் செய்யப் படுகின்றன. விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர் கள் மட்டுமின்றி விவசாயிகளும் தங்களிடமுள்ள விதையின் தரத்தை பரிசோதனை செய்து அறிந்து கொள்ளலாம்.

விதையின் முளைப்புத் திறனை தெரிந்து கொண்டு விதையளவை முடிவு செய்யலாம். விதையின் ஈரப்பதத்தை தெரிந்து கொண்டு சரியான ஈரப்பதத்தில் விதையினை சேமித்து

வைக்கும் போது பூச்சி நோய் தாக்குதல் ஏற்படாமல் பாது காக்கலாம். பிறரக கலப்பு பரிசோதனையின் மூலம் வேறு ரக விதைகள் கலந்துள்ளதா என தெரிந்து கொண்டு விதையின் தரம் குறையாமல் பார்த்துக் கொள்ளலாம். இவ்வளவு முக்கியத் துவம் வாய்ந்த நல்ல விதையை தேர்வு செய்திட தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

எனவே விவசாயிகள் தங்கள் சாகுபடிக்கான விதை குவியலில் இருந்து மாதிரி விதைகளை குறைந்தபட்சமாக நெல்-100 கிராம், உளுந்து, பாசிப்பயிறு-150 கிராம், நிலக்கடலை, மக்காசோளம்-500 கிராம், எள், ராகி-25 கிராம் ஆகிய அளவில் எடுத்து தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்துடன் திருச்சிராப் பள்ளி புத்தூர் நால்ரோட்டில் உள்ள ஒருங்கிணைந்த விதைச் சான்று மற்றும் உயிர்மசான்று வளாகத்தின் கீழ் தளத்தில் செயல்பட்டு வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில் நேரில் கொடுக்க வேண்டும். விதைகளின் தரம் பற்றி அறிந்து கொள்ள ஒரு விதை மாதிரிக்கு ஆய்வு கட்டணமாக ரூ.80/- மட்டுமே செலுத்த வேண்டும். அதிக மகசூல் பெற்றிட, விதைக்கும் முன் விதைகளை பகுப்பாய்வு செய்து தரமான விதைகளை பயன் படுத்தி விதைத்திட திருச்சிராப்பள்ளி விதைப்பரிசோதன நிலைய வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா, இரா.புவனேஸ்வரி மற்றும் விதைப் பரிசோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# நிலக்கடலை மற்றும் இராகி பயிரை காப்பீடு செய்ய அழைப்பு!

கிருஷ்ணகிரி, ஜுலை 27

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரத்தில் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் நடப்பு பருவத்தில் ஆகஸ்ட் 17ம் தேதிக்குள் பயிர்களை காப்பீட்டு செய்து கொள்ளலாம்.

சூளகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர் செல்வம் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது.

இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளின் நலன் மற்றும் வாழ்வாதாரங்கள் பாதுகாக்க படுவதை உறுதிப்படுத்தும் வகையில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நிலவும் எல் –நினோ தாக்கத்தால் தென் மேற்கு பருவ மழை இயல்பை விட குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் குறுவை மற்றும் மானாவாரி பயிர்கள் பாதிக்கப்பட்ட வாய்ப்புள்ளது.

இதனை கருத்தில் கொண்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் 2026 குறுவை பருவத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சூளகிரி வட்டாரத்தில் இராகி, துவரை, நிலக்கடலை பயிருக்கு பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அறிக்கை செய்யப்பட்ட பிரிமியம் செலுத்தி பயிர் காப்பீட்டு செய்து கொள்ள கேட்டு கொள்ளப்படுகிறது.நிலக்கடலைக்கு ரூ.452 இராகிக்கு ரூ.255 மற்றும் துவரைக்கு ரூ.374 செலுத்தி காப்பீடு செய்து கொள்ளலாம். காப்பீடு செய்வதற்கான கடைசி நாள் 17.08.26 ஆகும்.

விவசாய கடன் பெறும் விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் காப்பீட்டு செய்து கொள்ளலாம்.கடன் பெறாத விவசாயிகள் இ-சேவை மையங்கள் அல்லது தேசிய பயிர் காப்பீட்டு இணையத்தில் பதிவு செய்து பயனடையலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# உச்சத்தில் முட்டை விலை. விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது-தெரியுமா?



முட்டை உற்பத்தி என்றாலே அனைவரின் நினைவிற்கு வருகிறது நாமக்கல் மண்டலம் தான். ஓலை கொட்டகையில் தொடங்கி பெரிய பெரிய பண்ணைகள் வரை தினமும் 7 கோடி அளவிற்கு முட்டைகள் (EGG) உற்பத்தி செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ளது. கேரளம் உள்ளிட்ட வெளிமாநிலங் களுக்கு மற்றும் கத்தார் அரபு நாடுகளுக்கு பல லட்சம் முட்டைகள் கடல்வழியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**முட்டை விலை நிர்ணயிப்பது எவ்வாறு? எப்படி?**

நாமக்கல் மண்டலத்தில் உள்ள 1350 கோழிபண்ணைகள் உள்ளன. இங்கு 9 கோடி முட்டைக் கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் முட்டைகளுக்கு தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு ( NATIONAL EGG CO ORDINATION COMMITTE) N.E.C.C தினந்தோறும் விலையை நிர்ணயிக்கிறது.

இந்த அமைப்பானது 1982ஆம் ஆண்டு மே மாதம் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டு, அதே ஆண்டு மே 14ந் தேதி முதல் தினசரி முட்டை விலை அறிவிக்க தொடங்கியது இன்று வரை தொடர்கிறது. சுமாராக 25 ஆயிரத்து மேற்பட்ட கோழிபண்ணையாளர்கள் இதில் உறுப்பினர்களாக உள்ள தால் இது உலகின் மிகப்பெரிய அமைப்பாக உள்ளது குறிப்பிடதக்கது.

முட்டை நிர்ணய விலையால் எவ்வித குளறுபடிகள் இல்லாமல் கோழிபண்ணையாளர்கள் விற்பனை செய்ய முடியும். இந்த அமைப்பு இல்லை என்றால் இடைத் தரகர்களின் தலையீடு அதிகமாக இருக்கும். இதனால் உற்பத்தி யாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் சந்தைபடுத்துதலில் சமநிலை பாதிக்கும். தற்போதைய முட்டை கொள்முதல் விலை 6.50 யாக உள்ளது.

### விலை எதன் அடிப்படையாக நிர்ணயிக்கப்படுகிறது?

கோழிக்கான முக்கிய தீவனப்பொருட்களான மக்காசோளம், சோயா பீன்ஸ், தவிடு மற்றும் உடைந்த அரிசி ஆகியவற்றின் தினசரி விலை நிலவரத்தை வைத்து தான் விலை நிர்ணயிக்கப்படுகிறது. தீவனங்களின் விலை உயரும் போது பண்ணையாளர்களின் உற்பத்தி செலவை ஈடுகட்ட முட்டையின் விலையும் உயர்த்தபட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு தினசரி விலையை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வில்லை என்றால் இடைத்தரகர்கள் தங்களுக்கு சாதகமாக விலையைக் குறைத்துப் பண்ணையாளர்களை ஏமாற்ற கைகூடும்.

வெளிப்படையான நியாயமான வர்த்தக சூழலை உருவாக்கவே இந்த தினசரி விலை நிர்ணய முறை பின்பற்றப் படுகிறது.

### அப்படி என்னென்ன சத்துகள் முட்டையில் இருக்கு?

ஒரு பெரிய அளவிலான அவித்த முட்டையில் ( சுமார் 50 கிராம்) உயர்தர புரதம் 6.3 கிராம், நல்ல கொழுப்பு 5.3 கிராம், வைட்டமின்கள் பி.12,ஏ.டி.பி2, மற்றும் தாது உப்புகள் ஆன்டி ஆக்ஸிடென்ட கோலின் மற்றும் போலிக் அமிலம் உள்ளது. சிறு வயது முதல் முதியோர்களுக்கு ஏற்ற உணவாகும்.

தமிழக அரசு 2008 முதல் இன்று வரை பள்ளிக் குழந்தைகளுக்கு பள்ளி வேலை நாட்களில் முட்டை சத்து உணவில் வழங்கப்படுவது குறிப்பிட்டத்தக்கது.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.



# நவீன வேளாண்மையில் மீன் அமிலோ அமிலம் உபயோகப்படுத்தும் முறை

இதனை மீன் அமிலம் என்றும் விவசாயிகள் அழைக்கின்றனர். மீன் அமிலம் தயாரிப்பதற்கு மீன் கழிவுகளை உபயோகப்படுத்தலாம். இறைச்சிக்கு பயன்படுத்தியதற்கு போக மீதமுள்ள மீன் கழிவுகளை மீன் அமிலம் தயாரிக்க உபயோகப்படுத்தலாம் மீன் அமிலம் தயாரிக்க உபயோகப்படுத்தலாம். மீன் தலை, குடல் மற்றும் வால் என அனைத்து பாகங்களையும் பயன்படுத்தலாம். மீன் கழிவுகளை சேகரிக்கும் பொழுது அதனுடன் தண்ணீர் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எதிர்பாராத விதமாக தண்ணீர் இருந்தால் அதை வடித்து விட வேண்டும். இந்த கரைசலை தயாரிப்பதற்கு சம அளவு மீன் கழிவுகள் மற்றும் நாட்டுச் சர்க்கரை எடுத்துக் கொள்ள வேண்டும். அதவாது 5 கிலோ மீன் கழிவு எடுத்துக் கொண்டால் 5 கிலோ நாட்டுச் சக்கரையை ஒரு பெரிய மண் அல்லது பிளாஸ்டிக் பாத்திரத்தில் மூன்றில் ஒரு பங்கு மேல்பகுதி காலியாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் இதை நொதித்தலுக்கு உட்படுத்தும் போது நிறைய வாயுக்கள் உற்பத்தியாகும். பின்பு இதை மூடி அல்லது பருத்தி யாலான துணியைக் கொண்டு இறுக மூடி விட வேண்டும். இவ்வாற செய்யவில்லை என்றால் கொசுக்கள் மற்றும் தீமை வைத்து விடும். இந்தக் கலவையை 15 நாட்களுக்கு அப்படியே நொதிக்க விட வேண்டும். பிறகு இதனை நன்றாக கலந்து அதிலிருந்து வரும் திரவத்தினை வடித்துக் கொள்ளலாம். தண்ணீரை எந்த இடத்திலும் சேர்க்ககூடாது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட கரைசலை 6 மாதம் வரை சேமித்து வைத்து பயன்படுத்தலாம்.

**உபயோகிக்கும் முறைகள்** : இந்த இரண்டு பயிர் வளர்ச்சி ஊக்கிகளையும் இலை வழியாகவும் மற்றும் சொட்டு நீர் பாசனத்தின் மூலமும் அளிக்கலாம்.

**இலை வழி தெளிப்பு** : அனைத்து வகையான பயிர்களுக்கும் 2 மூ என்ற அளவில் தண்ணீருடன் கலந்து தெளிக்கலாம். அதாவது 20 மில்லி லிட்டர் மீன் அமிலம் ஃ முட்டை அமில கரைசலை எடுத்துக்கொண்டு ஒரு லிட்டர் தண்ணீருடன் கலந்து பயிர்களுக்கு தெளிக்க வேண்டும். இதை 15 ஊ;குவிக்கலாம்.

**மண்ணில் இடுதல்** : இந்த இரண்டு பயிர் வளர்ச்சி ஊக்கிகளையும் சொட்டு நீர் பாசனத்தின் மூலமும் மண்ணிற்கு அளிக்கலாம். இதற்கு 20 லிட்டர் பயிர் வளர்ச்சி ஊக்கிகளை ஒரு ஏக்கர் நிலத்திற்கு சொட்டுநீர் பாசனத்தின் வழியாகவோ அல்லது பாத்தி நீர் பாசனத்தின் வழியாகவோ மண்ணில் இடலாம்.

பல்லாண்டு பயிர்களான தென்னை மற்றும் பாக்கு போன்ற மரங்களுக்கு ஒரு மரத்திற்கு 300 மில்லி என்ற விகிதத்தில் அளிக்கலாம். இந்த பயிர் வளர்ச்சி ஊக்கிகளை இலைவழியாகவோ அல்லது சொட்டுநீர் பாசனத்தின் வழியாகவோ கொடுக்கும் பொழுது மற்ற இராசாயன பூச்சிக் கொல்லிகளுடனோ அல்லது செயற்கை உரங்களுடனோ கலந்து பயன்படுத்தக் கூடாது இதை தெளிக்கும் பொழுது மற்ற அங்கக இலைவழி தெளிப்பான்களை பயன்படுத்தியிருந்தால் 15 நாட்கள் இடைவெளி கொடுத்து அடுத்த பயிர் வளர்ச்சி ஊக்கியை தெளிக்க வேண்டும்.

தகவல் : ***யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.***



# பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டு (PRA) செயல்முறைகள் நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

தென்காசி, ஜுலை 27

கலசலிங்கம் ஆராய்ச்சி மற்றும் கல்வி அகாடமி (Kalasalingam Academy of Research and Education) தோட்டக்கலைத் துறை மாணவர்கள், தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூரில் 22 மற்றும் 23.07.26 ஆகிய தேதிகளில் கிராம மக்களின் உற்சாகமான பங்கேற்புடன் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டு (Participatory Rural Appraisal - PRA) செயல்முறைகளை மேற்கொண்டனர்.



இந்நிகழ்ச்சியை மு.அபர்ணா உண்ணிதன், ரஸக்னா க, கார்த்திகாஸ்ரீ மு மற்றும் அனிதா கு ஆகிய மாணவிகள், தோட்டக்கலை துறை துணை பேராசிரியர் முனைவர் சீ.விஜயகுமார் மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் வி. விஜய பிரபா, உதவிப் பேராசிரியர் (CRP) வழிகாட்டுதலிலும், மேற்பார்வையிலும் நடத்தினர்.

மாணவர்கள் கிராம மக்களுடன் நேரடியாக கலந்துரையாடி, கிராமத்தின் சமூக, பொருளாதார மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தனர். இந்நிகழ்வில் சமூக வரைபடம் (Social Mapping), குறுக்குவெட்டு நடைப்பயணம் (Transect Walk), தினசரி செயல்பாட்டு கடிகாரம் (Daily Activity Clock) மற்றும் காலவரிசைப் பதிவு (Timeline) ஆகிய முக்கிய PRA கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ப.ராஜா, தோட்டக்கலை உதவி இயக்குநர் வழிகாட்டலில், பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டு (PRA) செயல்முறையின் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள், கடந்த பத்து ஆண்டுகளில் வாசுதேவநல்லூர் கிராமத்தில் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதை வெளிப்படுத்தின.

குறிப்பாக, சாலை, குடிநீர், மின்சாரம் மற்றும் தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்

பட்டுள்ளதுடன், கல்வி மற்றும் சுகாதார சேவைகளின் அணுகலும் விரிவடைந்துள்ளது. மேலும், அரசின் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் கிராம மக்களை விரிவாகச் சென்றடைந்துள்ளன.

வேளாண்மைத் துறையில் சொட்டு நீர்ப்பாசனம், இயந்திர மயமாக்கல் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதுடன், விவசாய நடைமுறைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடுகள் வலுப்பெற்றதன் மூலம் பெண்களின் சமூக மற்றும் பொருளாதாரப் பங்களிப்பு உயர்ந்துள்ளது. அதேபோல், தகவல் தொடர்பு வசதிகள் மற்றும் பொதுச் சேவைகளின் மேம்பாடு கிராம மக்களின் வாழ்வாதாரத் தரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் குறிப்பிடத்தக்க அளவில் உயர்த்தி உள்ளது. இம்மாற்றங்கள் அனைத்தும் கிராம மக்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஆவணப்படுத்தப்பட்டு, கிராமத்தின் வளர்ச்சிப் பயணத்தைப் பிரதிபலிக்கும் முக்கிய பதிவுகளாக அமைந்தன.

இச்செயல்முறைகள் மூலம் மாணவர்கள் கிராம மக்களின் தேவைகள், கருத்துகள் மற்றும் உள்ளூர் வளங்கள் குறித்து நேரடி அனுபவ அறிவைப் பெற்றதுடன், எதிர்கால வேளாண்மை மற்றும் தோட்டக்கலை சார்ந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களுக்கு தேவையான அடிப்படைத் தகவல்களும் சேகரிக்கப்பட்டன. கிராம மக்களின் உற்சாகமான ஒத்துழைப்புடனும், ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடனும் இந்நிகழ்ச்சி சிறப்பாக நிறைவுற்றது.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காரீப் பருவ பயிர்களை காப்பீடு செய்ய வேண்டுகோள்

திருவள்ளூர், ஜூலை 27

எல்லாபுரம் வட்டாரத்தில் 2026 - 27 ஆம் ஆண்டு பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் காரீப் பருவத்தில் அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட்., காப்பீடு நிறுவனத்தால் செயல்பட உள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் குறுவை நெல், நிலக்கடலை, உளுந்து பச்சைப் பயிறு பயிர்கள் காரீப் பருவத்தில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வருவாய் கிராம அளவில் குறுவை நெல் பயிருக்கு பிரீமியத் தொகையான ஏக்கர் ஒன்றுக்கு ரூ.615 /-, பிர்கா அளவில் நிலக்கடலை பயிருக்கு பிரீமியத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் ரூ.644/-, கம்பு பயிருக்கு பிரீமியத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.252 /-, உளுந்து பயிருக்கு பிரீமியத் தொகையான ஏக்கர் ஒன்றுக்கு ரூ.480/-, பச்சைபயிறு பயிருக்கு பிரிவின் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.480/- ஐ 31.07.26 தேதிக்குள்ளும் செலுத்த வேண்டும்.

எல் நினோ (El Nino) வானிலை தாக்கம் காரணமாக இந்த ஆண்டு பருவமழை இயல்பை விட குறைவாக இருக்க வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால் பயிர் மகசூல் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதால், விவசாயிகள் முன்கூட்டியே எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது அவசிய மாகும். எதிர்பாராத வறட்சி, குறைந்த மழைப்பொழிவு மற்றும் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பிலிருந்து பாதுகாப்பு பெற, அனைத்து விவசாயிகளும் பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் (PMFBY) உடனடியாக விண்ணப் பித்து பயனடையுமாறு வேளாண்மைத் துறை கேட்டுக் கொள்கிறது. எனவே, தங்களது பகுதியில் அறிவிக்கப்பட்டுள்ள இறுதி தேதிக்குள் அருகிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் விண்ணப்பித்து பயிர் களை காப்பீடு செய்து பாதுகாத்துக் கொள்ளுமாறு எல்லாபுரம் வேளாண்மை உதவி இயக்குனர் அ.உமா மகேஸ்வரி கேட்டுக் கொள்கிறார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பாதுகாக்கப்பட்ட சூழலில் கொய் மலர்கள் மற்றும் காய்கறிகளைப் பயிரிடுவது குறித்த விழிப்புணர்வு பயிற்சி

கன்னியாகுமரி, ஜூலை 27

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் தோவாளை மலரியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் வட்டாரம் பகுதியின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகாமை சார்பில் 23.07.26 அன்று 11 மணியளவில் சுமார் 30 விவசாயிகள் வருகை தந்தனர்.

பாதுகாப்பான சூழலில் கொய்மலர்கள் மற்றும் காய்கறிகளை பயிரிடுவது பற்றிய விழிப்புணர்வு பயிற்சிக்கு வருகை தந்தவர்களை மலர் ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர் முனைவர் தி.ராஜ் பிரவின் வரவேற்றார். பின்னர் மலர் ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சி, விரிவாக்க மற்றும் உயர் கல்வி முயற்சிகளை பற்றி விளக்கி கூறினார். மேலும் பாதுகாக்கப்பட்ட சூழலில் கொய்மலர்கள் மற்றும் வெள்ளரி, தக்காளி, குடை மிளகாய் பயிரிடுவது பற்றிய கலந்துரையாடல் நிகழ்வும் நடைபெற்றது. பின்னர் மலர் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூத்த வேளாண் அலுவலர் சொ.நல்லபெருமாள் மலர் ஆராய்ச்சி நிலைய பண்ணை மற்றும் கபிலர் பல்லுயிர் பூங்காவை சுற்றி காண்பித்தார். இறுதியாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் மு.சக்தி வடிவேலன் நன்றி தெரிவிக்க இரண்டு நாள் பயிற்சி இனிதே நிறைவு பெற்றது.

# கரும்பு சாகுபடிக்கு நுண்ணீர் பாசனம் அமைக்க வேண்டுகோள்

திருவள்ளூர், ஜூலை 27

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு வட்டாரத்தில் சுமார் 605 ஹெக்டேரில் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரும்பு பயிரில் நீர் சிக்கனத்தை உறுதி செய்து, மகசூலை அதிகரிக்கும் நோக்கில் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் நிலத்தடி சொட்டு நீர்ப்பாசனம் (Sub-Surface Drip Irrigation) அமைக்க வேளாண்மைத் துறை விவசாயிகளுக்கு பரிந்துரை செய்துள்ளது.

நிலத்தடி சொட்டு நீர்ப்பாசன முறையைப் பயன்படுத்துவதன் மூலம் தண்ணீர் மற்றும் உரம் சிக்கனமாக பயன்படுத்தப் படுவதுடன், களை வளர்ச்சி குறைந்து, தொழிலாளர் செலவு

குறையும். மேலும், கரும்பின் வளர்ச்சி மற்றும் மகசூல் அதிகரிப்பதற்கும் இம்முறை பயனுள்ளதாக உள்ளது.

நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் தகுதியான விவசாயிகளுக்கு அரசின் நடைமுறையில் உள்ள விதிகளின்படி, சிறு குறு விவசாயி களுக்கு 100% மானியம் மற்றும் இதர விவசாயிகளுக்கு 75 % மானியத்துடன் வழங்கப்படுகிறது. எனவே, திருவாலங்காடு வட்டாரத்தை சேர்ந்த கரும்பு சாகுபடி விவசாயிகள் இத்திட்டத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் அ.உமா மகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

மேலும், திட்டம் தொடர்பான விவரங்கள் மற்றும் மானியம் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறலாம்.

# மண் வளம் பாதுகாப்பில் பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரப்பயிர்கள்

மண் ஒரு உயிருள்ள பொருள். மண்ணிற்குள் ஏராளமான நுண்ணுயிர்கள் உயிர் வாழ்கின்றன். மண்ணுக்குள் பல பயனற்ற பொருட்கள் பயனுள்ள பொருட்களாக மாற்றப்படுகிறது. இன்றைய வேளாண்மை பெருகி வரும் மக்கள் தொகையின் உணவு மற்றும் உடைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. எனவே மண்ணின் உற்பத்தித் திறனை பராமரிப்பதில் அதிக கவனம் செலுத்தியாக வேண்டும். தொழு உரம் இடுதல். மண்புழு உரம் இடுதல், ஆட்டுக்கிடை வைத்தல். பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்து மடக்கி உழுதல், பசுநத்தழை உரமிடுதல் போன்ற பாரம்பரிய முறைகள் மூலம் மண்ணின் வளத்தை மேம்படுத்தலாம்.

**பசுந்தாள் உரப்பயிர்கள்**

தக்கைப்பூண்டு, கொளிஞ்சி, சணப்பு ஆகியவை பசுந்தாள் உரமாக பயிர் செய்வதற்கு ஏற்றவை. இப்பயிர்களை பயிர் செய்து பூப்பதற்கு முன் நிலத்தில் அப்படியே உழுது விட வேண்டும். கொளுஞ்சி, சணப்பு ஆகியவை நஞ்சை நிலங்களுக்கு ஏற்றவை. தக்கைப்பூண்டு களர் – உவர் நிலங்களுக்கும் ஏற்றவை.



நிலத்தின் களர்த் தன்மையைக் குறைக்கக்கூடியவை மற்றும் அதிக அளவு தழையை கொடுக்க கூடியது. பசுந்தாள் உரங்கள் ஒரு எக்டருக்கு சுமார் 80 கிலோ வரை தழைச்சத்தை நிலை நிருத்தக் கூடிவை. மேலும், பசுந்தாள் உரப்பயிர்களை மண்ணுக்குள் மடக்கி உழுவதால் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகரித்து, அவற்றி லிருந்து பலவிதமான அங்கக அமிலங்கள், வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் நொதிப்பொருட்கள் வெளிப்படுகின்றன. அந்த அங்கக அமிலங்கள் மண்ணில் கரையாத நிலையிலிருக்கும் ஊட்டச் சத்துக்களை குறிப்பாக மணிச்சத்தை கரைத்து பயிர்கள் எடுத்துக் கொள்ளும வடிவத்தில் மாற்றி கொடுக்கின்றது. இதனால், பயிருக்கு கிடைக்கக்கூடிய ஊட்டச்சத்துக்களின் அளவு அதிகரிக் கின்றது. பசுந்தாள் பயிர்களை வளர்ப்பதன் மூலம் ஆகாயத்தில் உள்ள தழைச்சத்தை மண்ணில் நிலப்படுத்த முடிகிறது. இத்தழைகள் எளிதில் மக்கும் தன்மையுடையவை. இவற்றை மண்ணில் இடுவதன் மூலம் நுண்ணுயிர்களின் செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படுகிறது. பசுந்தாள் பயிர்களால் மண்ணின் நீர்பிடிப்புத்திறன் அதிகரிக்கும். களைச்செடி வளர்ச்சியினை குறைக்கலாம்.

**பசுந்தழை உரப்பயிர்கள்**

பசுந்தழை உரம் என்பது வேறு இடங்கில் இருந்து கொண்டு வரப்பட்ட இலைகள், மரங்கிளைகள், கொம்புகள், புதர்செடி, முதலியவற்றை வயலில் இட்டு உழுதுவிட வேண்டும். பயிரிடப்படாத நிலங்கள், வயல் வரப்பு மற்றும் வேறு இடங்களில் வளரக்கூடிய செடிகளும் பசுந்தழை உரத்திற்கான மற்றொரு ஆதாரம் ஆகும்.

**பசுந்தழை உரத்திற்கு முக்கியமான செடி வகைகள்**

வேம்பு, இலுப்பை, புங்கம், சுபாபுல், எருக்கு மற்றும் அகத்தி. இவற்றில் வேம்பு, புங்கம் ஆகியவை ஓரளவு பூச்சிகளைக் கட்டுப்படுத்தக் கூடியவை. பயிர்கள் எதுவும் பயிரிடாத பருவத்தில் இவ்வகை பசுந்தாள் உரப்பயிர்களை வளர்த்து மண்ணுக்குள் மடக்கி உழுவதால் அடுத்த பருவ பயிரில் அதிக மகசூல் பெறலாம். விதைக்கும் முன் தூத்துக்குடி எட்டயபுரம் ரோடு, ஒழுங்குமறை விற்பனை கூட வளாகத்தில் செயல்படும் விதைப்பரிசோதனை நிலையத்தில் உரிய கட்டணத்துடன் விதைகளை பரிசோதித்து விதைத்தால் சரியான பயிர் எண்ணிக்கையை பராமரித்து அதிக மகசூல் பெறலாம் என திருநெல்வேலி விதைப்பரிசோதனை அலுவலர் ஆனந்தி ராதிகா மற்றும் தூத்துக்குடி விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சேக் நூஹ் ஆகியோர்கள் தெரிவித்தனர்.

# ஹைட்ரோபோனிக்ஸ் வேளாண்மையின் நன்மைகள்

**நவீன விவசாயத்தின் புதிய புரட்சி**

இன்றைய உலகில் விவசாயம் பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது. விளைநிலங்களின் பரப்பளவு குறைதல், தண்ணீர் பற்றாக்குறை, காலநிலை மாற்றம், மண் வளம் குறைதல் போன்ற காரணங்களால் பாரம்பரிய விவசாயம் சவாலாக மாறியுள்ளது.




இத்தகைய சூழலில்,மண் இல்லாமல் தாவரங்களை வளர்க்கும் ஹைட்ரோபோனிக்ஸ் (Hydroponics) தொழில்நுட்பம் நவீன விவசாயத்திற்கு சிறந்த மாற்றாக உருவெடுத்துள்ளது.

**ஹைட்ரோபோனிக்ஸ் என்றால் என்ன?**

ஹைட்ரோபோனிக்ஸ் என்பது மண்ணைப் பயன்படுத்தாமல், தாவரங்களுக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துகளையும் நீரில் கரைத்து வழங்கி பயிரிடும் ஒரு நவீன வேளாண் முறை ஆகும். இதில் தேங்காய் நார் (Cocopeat), பெர்லைட் (Perlite), வெர்மிகுலைட் (Vermiculite) போன்ற ஊடகங்கள் பயன்படுத்தப் படலாம் அல்லது சில முறைகளில் எந்த ஊடகமும் இல்லாமலும் பயிரிடப்படுகிறது.

**ஹைட்ரோபோனிக்ஸ் முறையின் நன்மைகள்**

**1. குறைந்த நீர் பயன்பாடு**

பாரம்பரிய விவசாயத்தை விட 80—90% வரை குறைவான தண்ணீரே பயன்படுத்தப்படுகிறது. பயன்படுத்தப்படும் நீர் மறுசுழற்சி செய்யப்படுவதால் நீர் வீணாகாது.

**2. மண் தேவையில்லை**

மண் வளம் குறைந்த பகுதிகளிலும், நகர்ப்புறங்களிலும், மாடித் தோட்டங்களிலும் எளிதாக பயிரிட முடியும்.

**3. அதிக மகசூல்**

தாவரங்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகள் நேரடியாக கிடைப்பதால் விரைவான வளர்ச்சியும் அதிக மகசூலும் கிடைக்கிறது.

**4. ஆண்டு முழுவதும் சாகுபடி**

காலநிலையை அதிகம் சாராமல் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் ஆண்டு முழுவதும் பயிர்களை உற்பத்தி செய்ய முடியும்.

**5. பூச்சி மற்றும் நோய் தாக்கம் குறைவு**

மண் மூலம் பரவும் பல நோய்கள் மற்றும் பூச்சி தாக்கங்கள் குறைவாக இருப்பதால் பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடும் குறைகிறது.

**6. தரமான விளைபொருட்கள்**

கீரைகள், காய்கறிகள், பழங்கள் போன்றவை சுத்தமாகவும் உயர்தரமாகவும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**7. இடச் சிக்கனமான தொழில்நுட்பம்**

செங்குத்து (Vertical Farming) முறையில் குறைந்த இடத்தில் அதிக அளவு பயிர்களை வளர்க்க முடியும்.

**8. தொழிலாளர் செலவு குறைவு**

தானியங்கி நீர்ப்பாசனம் மற்றும் ஊட்டச்சத்து வழங்கும் அமைப்புகளால் தொழிலாளர் தேவை குறைகிறது.

**9. சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

மண் அரிப்பு ஏற்படாது. ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு குறைவதால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது.

**10. கால்நடை தீவன உற்பத்திக்கு ஏற்றது**


ஹைட்ரோபோனிக்ஸ் முறையில் 7—10 நாட்களுக்குள் சத்துமிக்க பசுந்தீவனத்தை (Hydroponic Fodder) உற்பத்தி செய்ய முடியும். இது பால் உற்பத்தி மற்றும் கால்நடை ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது.

**சவால்கள்**

- ஆரம்ப முதலீடு அதிகம்.
- மின்சாரம் மற்றும் தொழில்நுட்ப அறிவு அவசியம்.
- ஊட்டச்சத்து கரைசலின் pH மற்றும் EC அளவுகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

முடிவுரை : ஹைட்ரோபோனிக்ஸ் என்பது எதிர்கால உணவுப் பாதுகாப்பிற்கு மிக முக்கியமான தொழில்நுட்பமாகும். குறைந்த நீர், குறைந்த நிலப்பரப்பு மற்றும் அதிக உற்பத்தி என்ற மூன்று முக்கிய இலக்குகளை நிறைவேற்றும் இந்த முறை, நகர்ப்புற விவசாயம், கால்நடை தீவன உற்பத்தி மற்றும் உயர்மதிப்புள்ள காய்கறி சாகுபடிக்கு சிறந்த தீர்வாக விளங்குகிறது. அரசின் ஆதரவு, விவசாயிகளின் விழிப்புணர்வு மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகள் அதிகரித்தால், ஹைட்ரோபோனிக்ஸ் இந்திய வேளாண்மையின் நிலையான வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும்.

தகவல் : *குளோரி கே.எஸ். மற்றும் பிரசாத் சி., உதவி பேராசிரியர்கள் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை), வழிகாட்டுதலின் கீழ் அன்புமொழி ச., அருண்மொழி மு., யாழினி ரா., இறுதியாண்டு மாணவர்கள், கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.*


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333